**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 52/2018**

**Deposition of P.W.** 9

Name : திருமதி. காந்திமதி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 22.10.2025

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது திருவட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 02.11.2001ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்த தலைமைக்காவலர் 1090 திரு. சிந்தாமணி என்பவர் கொடுத்த இன்டிமேஷன் தகவலை பெற்று கோட்டார் கன்னியாகுமதி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த வாதியிடம் புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண். 1195/2001 பிரிவுகள் 341, 324, 307 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல்ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். காவல் ஆய்வாளர் திரு. எஸ், முருகன் என்பவர் இவ்வழக்கை விசாரணை செய்துள்ளார். மேற்படி காவல் ஆய்வாளர் திரு. எஸ். முருகன் இறந்து

விட்ட படியால் வழக்கு கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். 02.11.2001ம் தேதி 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பன்னீர் செல்வம், பாலகிருஷ்ணன் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைபார்வை இட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5. பின்னர் இவ்வழக்கின் குற்றப்பத்திரிகை சாட்சிகள் 1 முதல் 7 வரையிலான நபர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 11.01.2002ம் தேதி காலை 06.00 மணிக்கு சுவாமியார்டத்தில் வைத்து 2வது எதிரி ராஜன் என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். புகார்தாரரின் ரத்தம் பட்ட சட்டையை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் 95 அ.சா.ஆ.6. காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர்களிடம் காயசான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் தடையின்றி மின்சாரம் இருந்தது என்பதை காட்ட சாட்சி ஜாண்ரோஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சாட்சி நடராஜன் மற்றும் வழக்கு பதிவு செய்த தலைமைக்காவலர் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விசாரணையை முடித்து 21,07.2002ம் தேதி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால்

சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. 2வது எதிரி தாக்கியதாக கூறும் இடத்தில் காயம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மருத்துவ சான்றில் அந்த காயம் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.